நூல் அறிமுகம்

அஷ்ஷெய்க் எம்.ஏ.ஹபீல் ஸலபி

நபிகள் கோமான் முஹம்மத் (ஸல்) அவர்களின்

சரிதைச் சுருக்கம்

(மக்கா காலம்)

நூல் விபரம்

நூலின் பெயர்	நபிகள் கோமான் முஹம்மத்(ﷺ)அவர்களின் சரிதைச் சுருக்கம் (மக்கா காலம்)
ஆசிரியர்	அஷ்ஷெய்க் சமூன் எஸ். ரமழான் (B.A Hons. M.A Cey-Pera., PGDE)
பிரிவு / மொழி	வரலாறு / தமிழ்
பக்கங்கள் / பதிப்பு	188 பக்கங்கள் : முதல் பதிப்பு - 2026 (2000 பிரதிகள்)
விலை	ரூ.900.00 (இலங்கை விலை)
ISBN	978-624-6698-07-2
அட்டை வடிவமைப்பு	அஷ்ஷெய்க் எம்.ஏ. ஹ.்.பீழ் ஸலபி (MA)
பக்க வடிவமைப்பு	எம்.எஸ்.எம். .்.பைரூஸ் ஸலபி
வெளியீடு & விநியோகம்	தாருஸ் ஸுன்னா பதிப்பகம் 88/2, School Road, Paragahadeniya, Weuda, Sri Lanka. darassunnapub@gmail.com | Mobile +94 76 760 5275

நூலாசிரியர் அறிமுகம் :

அஷ்ஷெய்க் சமூன் எஸ். ரமழான் ஸலபி (B.A.Hons,MA,PGDE) இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிகத் துறையில் இளங்கலைப் பட்டமும், அதே பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கலாசாரத் துறையில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம், வரலாறு உள்ளிட்ட பல தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். "சிலுவை யுத்தங்கள்", "இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய வழிகெட்ட பிரிவுகள்" ஆகிய நூல்களை எழுதியதுடன், இமாம் அப்துர் ரஹ்மான் ஸஃதீ (ரஹ்) அவர்களின் "அல் கவ்லுஸ் ஸதீத்" (தமிழில் "தவ்ஹீதின் யதார்த்தங்கள்"), "அல்வஜீஸ்" ஆகிய நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) ஆசிரியர் கைநூல் எழுத்தாளர் குழு, கல்வித் திணைக்களத்தின் அரபு, இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகப் பாடநூல் குழு, முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தின் அஹதிய்யாப் பாடநூல் குழு ஆகியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடப் பட்டதாரியான இவர், அக்கலாபீடத்தில் விரிவுரையாளராகவும், புத்தளம் மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியராகவும், "உண்மை உதயம்" சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் பல ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார்.

ஓர் அநாதைச் சிறுவன் உலகை மாற்றிய வரலாறு :

முஹம்மத் ﷺ அவர்கள் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தார்கள். ஆறு வயதில் தாயையும் இழந்தார்கள். எட்டு வயதில் அரவணைத்த பாட்டனாரும் மறைந்தார். அநாதையாக வளரந்து, பின்னாளில் மக்காவின் வீதிகளில் "அல் அமீன் - நம்பிக்கைக்குரியவர்" என அனைவராலும் போற்றப்பட்டு, இறுதியில் மனிதகுலம் முழுமைக்கும் வழிகாட்டும் இறுதித் தூதராக உயர்ந்தார்கள்.

வாழ்வின் எந்த ஏற்றத்திலும் இறக்கத்திலும் உண்மையை விட்டுக்கொடுக்காத அந்த மாமனிதரின் மக்கா வாழ்க்கையை - பிறப்பு முதல் மக்காவின் இறுதிக் கட்டம் வரை - ஒரு தேர்ந்த ஆசிரியர் பாடம் நடத்துவது போல், படிப்படியாக, எளிய தமிழில் உங்கள் கரங்களில் வைக்கிறது இந்த நூல். அந்தவகையில், "ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய முன்மாதிரிமிக்க, உன்னத மாமனிதரின் மகத்தான வரலாறு."

இன்றை சூழலில் ஏன் இந்த நூல்?

நவீனம் என்ற பெயரில் அநீதியும் போலித்தனமும் தலைவிரித்தாடும் இந்தக் காலத்தில், நம் பிள்ளைகளுக்கு யாரைக் காட்டி "இவரைப் போல் வாழுங்கள்" என்று சொல்வது? திரைக் கதாநாயகர்களையா? சமூக வலைத்தளப் பிரபலங்களையா? இதற்கு நிறைவான விடையாக நிற்பவர் முஹம்மது நபி ﷺஅவர்களே.

சிறுவர் உரிமைகள், பெரியோருக்கான மரியாதை, பெற்றோருக்கான கண்ணியம், பெண்மையின் பெருமை, மனிதத்தின் மகிமை, சமத்துவம், நேர்மை, பொறுமை, கருணை, தியாகம், சகிப்புத்தன்மை, சமாதானம் - வாழ்வின் சகல நிலைகளுக்குமான தீர்க்கமான முன்மாதிரியை நபிகளாரின் வரலாற்றை விடத் தெளிவாக வேறெதுவும் தருவதில்லை.

ஆனால், ஸீரா நூல்களின் பெருங்கடலில் புதிதாகக் கற்கத் தொடங்குபவர் எங்கே ஆரம்பிப்பது? பெரிய நூல்கள் மலைப்பைத் தருகின்றன ஆய்வு நூல்கள் சிறுவர்களுக்கு எட்டுவதில்லை. இந்த இடைவெளியை அழகாக நிரப்புவதற்காகவே இந்நூலை வழங்கியுள்ளார் இந்த நூலாசிரியர்.

இந்த நூலை வேறுபடுத்துவது எது?

- துல்லியமான சுருக்கம் - 188 பக்கங்களில் மக்கா கால வரலாறு முழுவதும். ஆய்வுக் கட்டுரையின் சிக்கலோ, துறைசார் நூலின் கனமோ இல்லை. ஆனால், அடிப்படைத் தகவல்கள் அனைத்தும் உண்டு.
- பாடங்களாக வகுக்கப்பட்ட அமைப்பு - ஒவ்வொரு நிகழ்வும் தனித்தனிப் பாடமாக, சரியான தொடர்ச்சியில் அமைந்திருப்பதால், படிக்கத் தொடங்கினால் அடுத்த பாடத்துக்கு மனம் தானாகவே நகர்கிறது.
- ஒவ்வொரு பாட முடிவிலும் கேள்விகளும் பாடச் சுருக்கமும் - கற்றதை அப்போதே சரிபார்க்கவும் மனதில் நிறுத்தவும் உதவும் இந்த வடிவம், ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பெரும் துணை.
- மனனத்துக்கு ஏற்ற வடிவம் - முதல் கட்ட வரலாறு முடிவில் "மனனத்திற்கான சுருக்கம்" தரப்பட்டுள்ளது ஆர்வமுள்ளோர் வரலாற்றை நினைவில் நிறுத்திக்கொள்ள இது வழிவகுக்கும்.
- சிறுவர் முதல் முதியவர் வரை - சிறுவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளும் மொழி, பெரியவர்கள் மீள்பார்வை செய்யப் பொருத்தமான செறிவு.
- நம்பகமான மூலங்கள் - "முக்தஸரு ஸீரதின் நபிய்யி ﷺ" மற்றும் "ரவ்ழதுல் அன்வார் ∴பீ ஸீரதின் நபிய்யில் முக்தார்" ஆகிய நூல்களின் துணையுடன் தொகுக்கப்பட்டுள்ளது.
- அறிஞர்களின் வாழ்த்து - அணிந்துரை, மதிப்புரை, பதிப்புரை என மூன்று தரப்பின் வரவேற்புடன், திருத்தங்கள் செய்யப்பட்டு வெளிவந்துள்ளது.

நூலின் அமைப்பு

முதல் கட்டம் நபித்துவத்திற்கு முன்	இரண்டாம் கட்டம் நபித்தவத்திற்குப் பின்
மனித குலத்தின் முன்மாதிரி முஹம்மத் ﷺ அவர்களின் அறிமுகம், பெற்றோரும் பரம்பரையும், யானைப் படையும் பிறப்பும், பால்குடிப் பருவமும் குழந்தைப் பருவமும், தாயாரின் மரணமும் பாட்டனாரின் பொறுப்பேற்பும் பெரிய தந்தையின் வளர்ப்பும், மந்தை மேய்ப்பும் வியாபாரமும், "ஹில்ஃபுல் ஃபுழூல்" பாதுகாப்பு ஒப்பந்தம், ஷாம் நோக்கிய வியாபாரப் பயணம், அன்னை கதீஜா (ரழி) அவர்களுடனான திருமணம், கஃபா புனரமைப்பு, இளமைப் பருவ இயல்பு, ஹிராப் பொதும்பில் தனித்திருத்தல். இவ்வாறு, வரலாற்றை நினைவிற்கொள்ள இலகுவான வடிவமைப்பு.	வஹி இறங்கத் தொடங்குதல், இரகசிய அழைப்புப் பணி முதல் முஃமின்கள் குடும்பத்தினருக்கு அழைப்பு, பகிரங்க அழைப்பு, குறைஷிகளின் எதிர்ப்பும் அபூதாலிபிடம் அவர்கள் செய்த முறையீடுகளும், துன்புறுத்தல்கள், அபூலஹபின் தொல்லைகள், தாருல் அர்கம் - முதல் பாடசாலை அபிசீனியாவுக்கான ஹிஜ்ரத், ஹம்ஸா, உமர் (ரழி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றல், புறக்கணிப்பும் முற்றுகையும், அன்னை கதீஜா, அபூதாலிப் ஆகியோரின் மரணம், தாயிஃப் பயணம். இவ்வாறு ஒவ்வொரு பாட முடிவிலும் கேள்விகள்களும் பாடச் சுருக்கமும் தரப்பட்டுள்ளது.

இந்நூலை வாசித்து முடிக்கும்போது, நபி ﷺ அவர்களின் மக்கா வாழ்வை அறிந்தவராக மட்டுமல்ல, அந்த வாழ்வோடு உறவு கொண்டவராக, அவர்களின் வாழ்வியலோடு உணர்வால் தாக்க முற்றவராக, அந்த முன்மாதிரிகளை உங்கள் வாழ்வில் கடைப்பிடிக்க முனைபவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்கள்.

நூல் மதிப்பீடு :

அணிந்துரை - Dr. எஸ்.எம். ரயீஸ்த்தீன் (BUMS, MD) கொழும்புப் பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ பீடத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளரும், பங்களாதேஷ் ஹம்தர்த் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட வருகைதரு ஆய்வாளருமான இவர், இந்நூலின் அவசியத்தை அணிந்துரையில் எடுத்துரைத்து, ஆசிரியரின் முயற்சியை மனமாரப் பாராட்டி, வரவேற்றுள்ளார்.

மதிப்புரை - அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாரக் மதனி (PhD). நபிகளாரின் வரலாறு ஒரு சாதாரண வரலாறு அல்ல; வாழ்வின் ஒவ்வொரு துறைக்கும் வழிகாட்டும் ஒளி என்ற உணர்வை வலியுறுத்தி, இந்நூல் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் என அனைவருக்கும் பயனுள்ள, துணையாக அமையும் என அவரது மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

பதிப்புரை - இது ஸீரா நூல்களில் தனித்துவமான வேறுபாட்டைக் கொண்டது. ஆய்வுக் கட்டுரையாகவோ, துறைசார் படைப்பாகவோ அன்றி, நபிகளாரின் வாழ்வியலின் அடிப்படைத் தகவல்களைச் சுருக்கமாகத் தருவதே இதன் நோக்கம் என்பதை தாருஸ் ஸுன்னாப் பதிப்பகம் சுட்டிக்காட்டுகிறது.

ஆசிரியரின் நோக்கம் :

முன்னோர்களின் வரலாறுகளை அல்லாஹ் மனிதகுலத்துக்குப் பாடமாக்கியுள்ளான் என்ற சிந்தனையோடு தொடங்கும் ஆசிரியரின் முன்னுரை, நபிகளாரின் வரலாறு கற்பவர் தனது உள்ளத்தைப் பண்படுத்தும் ஒரு பயிற்சிக் களத்தினுள் நுழைகின்றார் என்பதை உணர்த்துகிறது. "நபிகளாரின் வரலாற்றைக் கற்பது அவர்கள் மீதான அன்பை அதிகரிக்கச் செய்கிறது. அது ஈமானின் அடையாளம்" என்ற நிறைவுச் சிந்தனையுடன், சிறார்களுக்கு ஸீராவைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும்,

புதிதாக ஸீராவை அறிய முயற்சிப்போருக்கும் இந்நூல் பெரிதும் உதவும் என அவர் எதிர்பார்க்கிறார். இதனடிப்படையில் ஒவ்வொரு பாட முடிவிலும் கேள்விகளையும் பாடச் சுருக்கத்தையும் இணைத்துள்ளார்.

இந்த நூல் யாருக்கு?

- பெற்றோருக்கு - இரவு நேரக் கதைச் சொல்லலுக்குப் பதிலாக, பிள்ளைகளோடு அமர்ந்து ஒரு பாடம் வாசிக்க.
- ஆசிரியர்களுக்கு - மத்ரஸா, வார இறுதிப் பாடசாலை, அறிவு வட்டங்களில் அப்படியே பாடமாகப் பயன்படுத்த.
- மாணவர்களுக்கு - கேள்விகளோடும் சுருக்கங்களோடும் எளிதாகப் படித்து மனனமிட.
- புதிதாகச் ஸீராவை அறிய விரும்புவோருக்கு - எங்கிருந்து தொடங்குவது என்ற குழப்பமின்றி, சரியான தொடக்கப் புள்ளியாக.
- நூலகங்களுக்கும் அன்பளிப்புக்கும் - குடும்ப நூலகத்துக்கு, பள்ளிவாசல் நூலகத்துக்கு, திருமணத் தம்பதிகளுக்கு, அன்புக்குரியவருக்கு வழங்கத்தக்க ஓர் அர்த்தமுள்ள பரிசாக உள்ளது.

இந்நூல் வலியுறுத்தும் வாழ்வியல் பண்புகள்

அன்பு • நீதி • நம்பிக்கை • நாணயம் • உண்மை • நேர்மை • பொறுமை • கருணை • தியாகம் • சுயகட்டுப்பாடு • சகிப்புத்தன்மை • சமாதானம் • சகவாழ்வு

ஒரு பக்கம் புரட்டினால் போதும்...

ஹிரா குகையின் மௌனத்தில், மனிதகுலத்தின் எதிர்காலத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தபடி தனித்திருக்கும் தனது சமூகத்தின் மீது அதிக அன்பும் அக்கறையும் கொண்ட ஒரு மனிதரை நீங்கள் சந்திப்பீர்கள். எளிமையான தாருல் அர்க்கமின் வீட்டில், உலகின் முதல் பாடசாலை ஒன்று அமைதியாக ஆரம்பமாவதை உணர்வீர்கள். குறைஷிகளின் எதிர்ப்பு, துன்புறுத்தல், புறக்கணிப்பு எனச் சோதனைகள் அடுத்தடுத்து வரும்போதும் பொறுமையோடும் இரக்கத்தோடும் நிமிர்ந்து நிற்கும் ஓர் இறைத்தூதரின் உறுதியைக் காண்பீர்கள். தாயிஃப் பயணத்தின் வலியில் கூட மனிதகுலத்துக்காகத் துடிக்கும் ஓர் இதயத்தின் கருணையை அறிவீர்கள்.

இவை, வெறும் வரலாற்றுக் காட்சிகள் அல்ல. ஒவ்வொன்றும் நம் வாழ்வுக்கான பாடம். தனிமையில் சிந்திக்கக் கற்றுத் தருபவை. சோதனையில் சரிந்துவிடாமல் துணிந்து நிற்கக் கற்றுத் தருபவை. எதிரிக்கும் இரக்கம் காட்டச் சொல்லித் தருபவை.

இன்றே வாங்கி அன்பளியுங்கள்...!

நபி(ﷺ)அவர்களின் வாழ்வியலில் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியை அறிமுகம் செய்வதே, ஒரு பிள்ளைக்கு நீங்கள் வழங்கக்கூடிய மிகச் சிறந்த அறிவுப் பரிசு. அந்தப் பணியை இலகுவாகவும் அழகாகவும் செய்து முடிக்கும் இந்நூலை உங்கள் இல்லம், பள்ளிவாசல், பாடசாலை நூலகங்கள் ஆகிய பொது இடங்களுக்கும் உறவினர், நண்பர் ஆகிய அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கலாம்.

பெற்றுக்கொள்ள :

தாருஸ் ஸுன்னா பதிப்பகம் - +94 76 760 5275 | darassunnapub@gmail.com

நூல் குறித்த கருத்துகளுக்கு : sramalan@gmail.com